**மாகாண கல்வி திணைக்களம் சப்ரகமுவ - வாராந்த பாடசாலை**

பாடம் : கணிதம்

வாரம் : ஜூன் ( 07 – 11 )

தரம் : 10

தயாரிப்பு : பா.யோகராஜ்
கே/தெஹி/ சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயம்

## *சதவீதம்*

- *அரசாங்கம் ஒவ்வொரு பொருளிக்கும் மக்களிடமிருந்து **வரி**யாக பணத்தை அறவிடுகிறது.*

- *அவை சதவீத அடிப்படையில் அறவிடப்படும்.*

- *மக்கள் நேரடியாக செலுத்தும் வரி **நேரடிவரி** எனப்படும்*

  - *இறை வரி*
  - *தீர்வை வரி*
  - *வருமான வரி*

1. *இறை வரி*
   *மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை எனும் உள்ளூராட்சி மன்றங்களினால் அதன் அதிகாரத்துக்கு உட்பட்ட பகுதிகளில் பணம் வசூலிப்பது இறை வரி ஆகும்.*

1. ஒரு நகரசபை அதிகாரத்திற்கு உட்பட்ட இருக்கும் காணி ஒன்றின் ஆண்டு பெறுமானம் ரூ *50,000* எனவும் ஆண்டு இறை வரி *10 %* எனின்

I. ஒரு ஆண்டுக்கு செலுத்த வேண்டிய இறைவரியை காண்க.

ஆண்டு இறை வரி $= 50,000 \times \frac{10}{100}$

$= 5000$ ரூ.

II. ஆண்டுப் பெறுமானம் ரூ *30,000* என மதிப்பிட்டுள்ள ஒரு கடைக்காக செலுத்த வேண்டிய இறை வரி *8 %* எனின்

- ஓர் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய இறை வரி யாது?

ஆண்டு இறை வரி $= 30,000 \times \frac{8}{100}$

$= 300 \times 8$

$= 2400$ ரூ

YOGA sir

வினா - 1

ஆண்டு பெறுமதி ரூ 25,000 உடைய வீடு ஒன்றிற்கு நகரசபை ஆனது 12 % இறைவரி அறவிடுகிறது எனின் காலாண்டு இறை வரியை காண்க.